தினமலர்

**August 11, 2016**

# எண்ணங்களை வண்ணங்களாக்கும் சுதந்திர தின கொண்டாட்டம்

சென்னை, ஆக. 11–

சுதந்திர தின விழாவையொட்டி, எண்ணங்களை வண்ணங்களாக மாற்றும் கொண்டாட்டத்தை, கல்லூரி மாணவ, மாணவியர் மேற்கொண்டுள்ளனர்.

நாட்டின், 70 வது சுதந்திர தினவிழா, ஆக., 9ம் தேதி முதல் 23ம் தேதி வரை, இரு வாரங்கள் கொண்டாடப்படுகிறது. விழாவையொட்டி, கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் பொது மக்கள் பங்கேற்று, சுதந்திர தினம் குறித்த கற்பனைகளை, எண்ணங்களை வண்ணங்களாக மாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்திலுள்ள பல்வேறு கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், சுதந்திர தின வண்ண கொண்டாட்டம் துவங்கியுள்ளது. கல்லூரி வாசல்களில் ஓவியம் வரையும் பேனர்கள் வைக்கப்பட்டு உள்ளன.

சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில், கடந்த இரு தினங்களாக இந்த ஓவியங்கள் வரைய ஏற்பாடுகள் செய்துள்ளனர். அவற்றில், மாணவியர், சுதந்திர தின வாசகங்கள், ஓவியங்களை வரைந்து, தங்கள் எண்ணங்களை வண்ணங்களாக வெளிப்படுத்துகின்றனர்.







■ சுதந்திர தின விழாவை கொண்டாடும் விதமாக ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில், 'கலர்ஸ் ஆப் இன்டிபென்டன்ஸ்' என்ற பெயரில், கருத்து பலகை வைக்கப்பட்டிருந்தது. இதில் மாணவியர் தங்கள் கருத்துகளை வண்ணங்கள் மூலம் பதிவு செய்தனர். ■ கருத்து பலகையோடு செல்பி எடுக்கும் மாணவியர்.